| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **934/2008** |
| தேதி | : | **26.02.2026.** |
| பெயர் | : | **நாகையா த/பெ நாகபூஷ்ணம்** |

**பி.வா.த.சா.1 (DW1) மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**(**சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது**. )**

**பி<u>வா.த.சா.1. (DW1) - குறுக்கு விசாரணை:</u>**

1) தாவா சொத்தின் நீளம் 42 அடி, அகலம் 27 அடி ஆகும். புல எண் எனக்கு தெரியாது. தாவா சொத்து மொத்த விஸ்தீரணம் ஆதியில் ரங்கையா நாயுடு என்பவருக்கு சொந்தமானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சீனிவாச நாயுடு என்பவர் எனக்கு பெரியப்பா ஆவார். நாகபூஷ்ணம் என்பவர் எனது தந்தை ஆவார். சீனிவாச நாயுடு என்பவருக்கும் எனது தந்தைக்கும் தாவா சொத்து எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தானது எனக்கு எனது தந்தை மற்றும் சீனிவாச நாயுடு அவர்கள் அனுபவத்தில் இருந்து வந்தது.

2) தாவா சொத்திற்கு 10 1/2 அகலம் மற்றம் 27 அடி நீளத்திற்கு மட்டும் பட்டா எனது பெயரில் வழங்கப்பட்டுள்ளது. தற்போது அது எனது மகளின் பெயரில் மாற்றப்பட்டுள்ளது. எனது தந்தை நாகபூஷ்ணம், கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு தாவா சொத்தினை விற்றது பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தை கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு தாவா சொத்தினை 11.04.1962 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரயப்பத்திரம் உள்ளது பற்றி எனக்கு தெரியாது.

3) எனது தந்தை நாகபூஷ்ணம், கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு தாவா சொத்தினை விற்றது பற்றி எனக்கு தெரியும் ஆனால் இவ்வழக்கிற்கான அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலதத்தில் எனது தந்தை கிருஷ்ணமூர்த்திக்கு கிரயம் செய்தது செல்லாது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தி என்பவர் சாந்தி என்பவருக்கு 18.01.2006 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பொது அதிகாரப்பத்திரம் வழங்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும். சாந்தி என்பவர் தாவா சொத்தினை இவ்வழக்கின் வாதிக்கு விற்ற விவரம் எனக்கு தெரியும். மேற்படி கிரயம் செய்த விவரம் எனக்கு எப்போது தெரிந்தது என்று நினைவில் இல்லை.

4) தாவா சொத்தில் மேற்சொன்ன கிரயம் பற்றி நான் வாதிக்கு தற்போது வரை

வழக்கறிஞர் அறிவிப்பு கூட அனுப்பவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் ஒரு பகுதியை எனது மகளுக்கு நான் தான செட்டில்மெண்ட் மூலம் வழங்கியுள்ளேன். எனது மகள் பெயர் நாகதேவி ஆகும். 28.03.2016 ம் தேதி தாவா சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் நான் தாவா சொத்தின் ஒரு பகுதியை தவறான முறையில் கிரயம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மகளுக்கு எனது பெயரில் உள்ள பட்டா நிலத்தினை மட்டும் கிரயம் செய்து கொடுத்தேன். மேற்படி பட்டாவானது 283.5 சதுர அடி நிலத்திற்கு மட்டும் தான்.

5) மேற்சொன்ன எனது மகளின் பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தில் நான் நான்கு பக்க எல்லைகளை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். வடக்கில் திருமங்கையாழ்வார் தெரு, தெற்கில் கௌசல்யா மனையும், கிழக்கில் சஞ்சீவி நாயுடு என்பவரின் மனையும், மேற்கில் பஜனை கோவிலும் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன எனது மகளின் பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தை பற்றி நான் எனது வழக்கறிஞருக்கு தெரிவித்தேனா என்பது பற்றி எனக்கு நினைவில் இல்லை. நான் நீதிமன்றத்தில் எனது மகளுக்கு கொடுத்த கிரயம் பத்திரம் பற்றி அனுமதி கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில் இல்லை.

6) வாதிக்கு எதிராக நான் இவ்வழக்கில் எதிர் வழக்கினை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில் இல்லை. எனது பெரியப்பா சீனிவாச நாயுடு என்பவருக்கு 5 குழந்தைகள். அதில் 3 ஆண் மற்றம் 2 பெண் குழந்தைகள் ஆகும். எனது தந்தைக்கு என்னுடன் சேர்த்து மூன்று பேர் வாரிசுகள் ஆகும். தாவா சொத்தில் மொத்த விஸ்தீரணத்தின் உரிமை எனது தந்தைக்கும் எனது பெரியப்பா இருவருக்கும் இருந்தது. எனது பெரியப்பா மற்றும் எனது தந்தைக்கு பாகப்பிரிவினை செய்திருந்தால் மொத்த அளவில் 42 அடி நீளம் மற்றும் 27 அகலம் நிலத்தில் சரி பாதி பிரிந்திருக்கும் என்றால் சரிதான். எனது தந்தைக்கும் எனது பெரியப்பாவிற்கும் பாகப்பிரிவினை நடைபெற்று அதன் அடிப்படையில் தான் எனது தந்தைக்கு கிடைக்கப்பட்ட தாவா சொத்து வாதிக்கு விற்கப்பட்டது என்றால் சரியல்ல.

**(**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யவேண்டி சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**.)**

**சாட்சி கையொப்பம் : Sd/. நாகையா.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.